# கருஞ்சட்டைத் தமிழர்

மாதம் இருமுறை

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

● மலர்:6 இதழ்: 21 ● திருவள்ளுவர் ஆண்டு 2047 ● சனவரி 1-15, 2017 ● விலை:ரூ.5 ● Volume:6 Issue:21 ● January 1-15, 2017 ● Price:Rs.5


# உடனடித் தேவை ஒரு பொதுத் தேர்தல்



**சுப.வீரபாண்டியன்**

அ.தி.மு.க.வின் புதிய பொதுச் செயலாளராகத் திரு சசிகலா தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார். இது ஒன்றும் எதிர்பாராத திருப்பம் இல்லை. ஆனால் அடுத்தடுத்து நாடு என்ன திருப்பங்களை எதிர்கொள்ளப் போகிறது என்பது எண்ணத்தக்கது.

ஒரு கட்சியின் பொறுப்புக்கு யார் தேர்ந்தெடுக்கப்பட்டால் நமக்கென்ன என்பது சரிதான். ஆனால் அ.தி.மு.க. என்பது ஆளும் கட்சியாகவும் இருப்பதால், அதன் பின் விளைவுகள் அந்தக் கட்சியோடு மட்டும் நின்றுவிடாது. அது நாட்டையும் பாதிக்கும். எனவே அது குறித்துக் கவலை கொள்ள நமக்கும் உரிமை உள்ளது.

இன்றைய ஆளும் கட்சியின் சட்ட திட்டங்களின்படி, பொதுச் செயலாளர் பதவியே அனைத்து அதிகாரங்களையும் உடையது. எனவே அந்தப் பொறுப்பிற்கு வரும் ஒருவர் அடுத்து தமிழக முதலமைச்சராக வருவதற்கும் வாய்ப்புள்ளது. அவ்வாறில்லை எனினும், முதலமைச்சரையே கட்டுப்படுத்தும் அதிகாரம் அந்தப் பதவிக்கு உளது. ஆதலால் இது கட்சிப் பிரச்சினையன்று, நாட்டின் பிரச்சினை என்பதாக நாம் உள்வாங்கிக் கொள்ள வேண்டியுள்ளது.

சரி, முதலமைச்சராகத்தான் யார் வந்தாலென்ன என்று நாம் இருந்துவிட முடியாது. அப்படி ஒருவரைத் தேர்ந்தடுக்கும் சட்ட அடிப்படையிலான உரிமை அக்கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத்தான் இருக்கிறது என்றாலும், அதிலும் பல வினாக்கள் உள்ளன. சட்டத்தைத் தாண்டி, பொது அறத்தின் அடிப்படையில் பார்த்தால், அந்தப் பதவிக்கு அடுத்து வருகின்றவர், ஒரு பொதுத் தேர்தலைச் சந்தித்து, பொது மக்களின் ஆதரவைப் பெற்று அங்கு வருவதே நியாயம்.

அண்ணா, கலைஞர், எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா அனைவரும் பொதுத் தேர்தல்களைச் சந்தித்தவர்கள். சசிகலா இன்றுவரையில் எந்த ஒரு தேர்தலையும் சந்திக்காதவர். அவர்கள் கட்சிக் கூட்டத்தில் கூட இதுவரையில் பேசாதவர். கட்சி நடவடிக்கைகள் எதிலும் கலந்து கொள்ளாதவர். அரசியல் போராட்டங்களில் கலந்துகொண்டு அதற்காகச் சிறை செல்லாதவர். அவருடைய குணம் என்ன என்பதை மட்டுமின்றி, அவர் குரல் எப்படியிருக்கும் என்பதைக் கூடத் தமிழகம் அறியாது. இந்த நிலையில் அவர் இத்தனை பெரிய பொறுப்புக்கு வருவது எந்த விதத்திலும் நியாயம் ஆகாது.

தங்களின் கட்சித் தலைவியாக அவரை அவர்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ளட்டும். ஆனால் நாட்டின் தலைவியாக வருவது குறித்து மக்களே முடிவெடுக்க வேண்டும். முதலமைச்சர் வேட்பாளர் யார் என்று கட்சி சொல்லலாம். முதலமைச்சர் யாரென்று மக்கள்தான் முடிவெடுக்க வேண்டும்.

திராவிடர் கழகத் தலைவர், ஆசிரியர் வீரமணி அவர்கள் சசிகலாவை ஆதரித்து எழுதியிருப்பது குறித்துச் சிலர் கேள்வி எழுப்புகின்றனர். பிறப்பின் அடிப்படையிலும், அவர் செய்த வீடியோ வணிகம் என்னும் தொழிலின் அடிப்படையிலும் அவரைப் பார்ப்பனர்கள் சிலர் குறி வைத்துத் தாக்கி வருகின்றனர். துக்ளக், தினமலர் போன்ற ஏடுகள் சசிகலாவுக்கு எதிரான எழுத்துப் போரைத் தொடங்கி நடத்தி வருகின்றனர். அவற்றுக்கு எதிராகவே, ஓர் எதிர்வினையாக ஆசிரியர் அந்த அறிக்கையை வெளியிட்டுள்ளார். மேலும், அ.தி.மு.க.வை வீழ்த்திவிட்டு அல்லது விழுங்கிவிட்டு பா.ஜ.க அந்த இடத்திற்கு வர முயலும் நிலை கண்டும், எச்சரிக்கையாக அவர் அந்தக் கருத்தைச் சொல்லியிருக்கக்கூடும்.

அந்த எதிர்வினையையும், அந்தப் பார்வையையும் நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது என்றாலும், அதனைத் தாண்டி நமக்குச் சில ஐயங்கள் உள்ளன. சசிகலாவைப் பின்னிருந்து ஆர்.எஸ்.எஸ். போன்ற இயக்கங்கள் வழி நடத்தாது என்பதற்கு எந்த உறுதியும் இல்லை. இல. கணேசன் போன்றவர்கள் சசிகலாவை ஆதரிப்பதையும் இங்கு நாம் நினைவு கூர வேண்டும். அவர் தலைக்கு மேல் உச்சநீதி மன்றத்தில் ஒரு வழக்கு தொங்கிக் கொண்டுள்ளது. அதனை வைத்தும் மத்திய அரசு சசிகலாவை அச்சுறுத்த முடியும். சசிகலா மடியில் கனம் இல்லாதவர் என்றும் சொல்லிவிட முடியாது. எனவே வழியில் பயம் இருந்தே தீரும்.

இவை அனைத்தையும் கணக்கில் கொண்டு பார்க்கும்போது, தமிழகத்தில் உடனடியாக ஒரு பொதுத்ததேர்தல் நடத்துவது என்பதே சரியானது. ஒரே ஆண்டில் மீண்டும் பொதுத் தேர்தல் என்றால் மக்களின் பணம் வீணாகாதா என்று சிலர் கவலைப்படக்கூடும். ஆம், வீணாகத்தான் செய்யும். ஆனால் ஒரு நாடு வீணாவதை விட, பணம் வீணாவது அப்படி ஒன்றும் பிழையில்லை.. ●




முன்னாள் மேயர் மா.சுப்பிரமணியனின்

மேயர்
பதிவியல்ல...
பொறுப்பு

நூல் வெளியீட்டு விழா

16.01.2017 திங்கள் மாலை 5 மணி

இடம் சென்னை புத்தகக் கண்காட்சி அரங்கம்
புனித ஜார்ஜ் மேல்நிலைப்பள்ளி
பெரியார் ஈ.வே.ரா நெடுஞ்சாலை,
பச்சையப்பன் கல்லூரி எதிரில்,
அமைந்தகரை, சென்னை

நூல் திறனாய்வு



பேராசிரியர் சுப.வீரபாண்டியன்

வெளியீடு

எழிலினி (எமரால்டு) பதிப்பகம்
15A முதல் தளம், காசா மேஜர் சாலை,
எழும்பூர், சென்னை – 600 008
தொலைப்பேசி 98406 96574

அனைவரும் வருக...


# மரணம் தழுவிய மாதம்



2015 டிசம்பர், மழை வெள்ளத்தோடு முடிந்தது. கடந்த டிசம்பர் மாதம் சென்னையைப் புயல் தாக்கியது. அதற்கு முன்பே டிசம்பர் 1 தொடங்கி, தமிழக முதலமைச்சர் உள்ளிட்ட, தமிழகம் அறிந்த ஆளுமைகள் பலரை, காலம் அள்ளிக்கொண்டு போய்விட்டது.

செல்வமும் செல்வாக்கும் சேர்கின்ற இடம் என்பதால், அரசியல் எப்போதுமே போட்டி, பொறாமைகளுக்கு உரிய இடமாக உள்ளது. அதிலும் ஆணாதிக்கம் மிகுந்த சமூகத்தில் ஒரு பெண் அரசியலின் உச்சத்திற்கு வருவது என்பது ஒரு சாதனை என்றே கூற வேண்டும். அத்தகு சாதனையை நிகழ்த்தி விட்டுத் தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா மறைந்துள்ளார்.

'மனுசங்கடா நாங்க மனுசங்கடா' போன்ற போர்க்குணம் மிக்க பாடல்களால், மக்கள் கவிஞராய் நம்மிடையே வாழ்ந்த போற்றுதலுக்குரிய கவிஞர், பேராசிரியர், எழுத்தாளர், நாடக ஆசிரியர் தோழர் இன்குலாப் டிசம்பரின் தொடக்கத்திலேயே மறைந்து போய்விட்டார்.

கரூருக்கு அருகில் உள்ள வாங்கலாம் பாளையம் என்னும் சிற்றூரில் பிறந்து, அறிவியல் உலகில் புகழ் பெற்றுத் திகழ்ந்து, குலோத்துங்கன் என்னும் கவிஞராகவும் உயர்ந்து, இறுதி வரையில் பகுத்தறிவாளராய் வாழ்ந்து, தமிழகத்திற்கே பெருமை சேர்த்த அறிவியல் அறிஞர் வா.செ.குழந்தைசாமி அவர்களையும் இந்த டிசம்பரில் நாம் இழந்து விட்டோம்.

'மேக்கிலி மங்கலத்துப் போக்கிலி' என்று அறிஞர் அண்ணாவால் செல்லமாய் அழைக்கப்பட்ட, 'தஞ்சை மண்டலத்தின் தளகர்த்தர்' என்று கலைஞரால் பாராட்டப்பெற்ற, தி.மு.கழகத்தின் தளபதிகளில் ஒருவராய் விளங்கிய, முன்னாள் அமைச்சர் கோ.சி.மணி அவர்களையும் இந்த டிசம்பர் மாதம் எடுத்து சென்றுவிட்டது.

இறுதிநாள் வரையில் திராவிட இயக்கத்திற்கு எதிரான கருத்துகளைத் தன் எழுத்தில் பதித்து வந்தாலும், இந்துத்துவ – பார்ப்பனியச் சிந்தனைகளுக்கு அடித்தளமாய் இருந்து வந்தாலும், தன் நையாண்டி எழுத்தால், தன் பன்முக ஆற்றலால் புகழ்பெற்றவராய் விளங்கிய நடிகர், துக்ளக் இதழின் ஆசிரியர் சோ ராமசாமியும் சென்ற மாதம் இறந்து போய்விட்டார்.

மறைந்துவிட்ட அனைவரின் உறவினர்கள், நண்பர்கள், கட்சியினர், அமைப்பினர் அனைவருக்கும் நம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

– ஆசிரியர்



# தைப்பாவாய்

## எழில்.இளங்கோவன்

கீழ்வானக் கடல்முதுகில் கிளம்பும் நெருப்புக்
கோளத்தின் கதிர்விரியக் கிழக்கு திக்கும்!
ஆழ்கடலின் முத்துக்கள் ஆடும் கொற்கை
அரியணையில் தமிழ்வீற்று ஆளும் கூடல்!
வாள்பறக்கும் படைகிளம்பும் வெண்ணி தொட்டு
வான்முட்டும் இமயத்தை வாளால் தொட்டார்!
தாழ்தொட்டார் இல்லையெனத் தமிழர் கூட்டம்
தோள்தொட்டார்; தைப்பாவாய் தோளே தொட்டார்!

ஆரியத்தால் வீழ்ந்தோம்நாம்! அன்று சொன்ன
ஆதிவேதம் புராணகதை அங்கே வீழ்ந்தோம்!
போரிட்டால் வென்றிருப்போம்; பூனூல் தொட்டுப்
பேரமைச்சே! இராஜகுரு! போற்றி என்று
வேரற்ற மரம்போல வீழ்ந்தோம் அங்கும்!
வகுத்துரைத்தான் நால்வருணம் வீழ்ந்தோம் அன்றும்!
தாருற்ற தைப்பாவாய் தோல்வி யில்லை
திராவிடத்தால் எழுகின்றோம் தோற்ப தில்லை!

திராவிடத்தால் எழுந்தோம்நாம் தேட்டை செய்யும்
தறுக்கரைநாம் திராவிடத்தால் தள்ளி வைத்தோம்!
“ஆரடாநீ சாதிசொல்ல? அற்ப மூடன்
ஆரடாநீ பெண்ணினத்தை அடிமை யாக்க?
ஆரடாநீ மனுவாதி? அவனின் நூலை
அனலிட்டுக் கொளுத்துங்கள்; அறிவும் மானம்
தேறப்பா” ஈரோட்டில் தெறித்தார் தந்தை
தைமகளே தமிழியத்தால் தகர்ப்போம் பகையை!

தமிழியம்தான் ஆரியத்தைத் தோற்க டிக்கும்
தமிழியமே ஆரியமாய்த் தோன்றா மட்டும்!
தமிழகத்தில் மதவாதத் தலைமைக் காகத்
தமிழரிடம் சாதிவெறி தலைவி ரிக்க
இமைகொட்டா விதைக்கிறது இந்துக் கூட்டம்;
எதிர்த்திடுவோம்! பெரியாரின் இடது சாரித்
தமிழியம்தான் பெருநெருப்பு; தமிழர் மானம்!
தைப்பெண்ணே! தமிழ்க்கண்ணே! தமிழால் வாழ்த்து!

வாமகளே தைப்பாவாய் வா!வா! உன்னை
வாழ்த்துகின்ற தமிழரைநீ வந்து வாழ்த்து!
மாமகளே! தமிழ்ப்பிறப்பே! மலர்கண் தேனே!
மாவிலையும் செங்கரும்பும் மழலைக் கூத்தும்
கோமகளின் வளையிசையில் குலுங்க; வாசல்
கோலத்தில் புதுப்பானை; கொதிக்கும் பொங்கல்;
வாமகளே தைப்பாவாய்! வந்து வாழ்த்து!
வளம்பெருக நலம்சிறக்க வாழ்த்து பாவாய்!

# இதுதான் மோடியின் சாதனை..?!



பதவியேற்று 700 நாள்களுக்கு மேலாகிவிட்டது.. மத்திய அரசின் சாதனைகளைச் சற்றுத் திரும்பிப் பார்ப்போம்.

↗ 3 ரூபாய் இருந்த பிளாட்பார்ம் டிக்கட் இன்று 10 ரூபாய்

↗ ஐந்து முறை இரயில் கட்டணம் உயர்வு

↗ 98 ரூபாய் இருந்த நெட்பேக் (data pack) இன்று 246 ரூபாய். 30 பைசா இருந்த கட்டணம் இன்று 1 ரூபாய்

↗ கச்சா எண்ணெயின் விலை பேரலுக்கு $ 119 இருந்த போது பெட்ரோல் விலை 67. ஆனால் பேரல் $ 30 என்று குறைந்த பிறகும் பெட்ரோல் 65 ரூபாய்.

↗ 70 ரூபாய்க்கு விற்ற பருப்பு இன்று 200 ரூபாய், இருந்தும் இது விவசாயிக்கு கிடைக்கவில்லை.

↗ 12.36% இருந்த சேவை வரி தற்போது 14.50%.

↗ 10% இருந்த கலால் வரி தற்போது 12.36%.

↗ 58.50 என்று இருந்த டாலர் மதிப்பு இன்று 68.50.

↗ எரிவாயு மானியத்தில் கிடைத்த லாபம் சுமார் 100 கோடி. ஆனால் அதற்கு விளம்பரச் செலவு 250 கோடி.

↗ ‘க்ளீன் இந்தியா’ செலவு 250 கோடி, ஆனால் துப்புரவுத் தொழிலாளிகளுக்குச் சம்பளம் பாக்கி.

↗ RSS மேற்பார்வையில் நடக்கும் கிசான் டிவிக்கு ஆண்டுக்கு 100 கோடி.

↗ யோகா தினத்திற்கு 500 கோடி செல்வு. அரியானா மாநிலப் பள்ளிகளுக்கும் 700 கோடி ரூபாயில் பாபா ராம்தேவின் யோகா பயிற்சி.

↗ பட்ஜெட்டில் கல்வித் துறைக்கு 20% வெட்டு.

↗ கார்ப்பரேட் கம்பனிகளின் 64,000 கோடி வாராக் கடன்.

↗ தற்கொலை செய்து கொள்ளும் விவசாயிகளுக்குக் கடன் தள்ளுபடி ஏதும் இல்லை.

↗ 2014 முதல் 2016 வரை விளம்பரச் செலவு மட்டும் 1,100 கோடி ரூபாய். அதாவது நாள் ஒன்றுக்கு சுமார் 1.5 கோடி.

↗ வெறும் 75,000 டாலராக இருந்த Liberalised Remittance Scheme (LRS) 2,50,000 டாலராக மாற்றி சுமார் 30,000 கோடி வெளிநாட்டில் பதுக்க உதவியது.

↗ இறுதியாக ஒன்று – ஆக்ரா பேரணியில் பங்கேற்க நேரம் இருந்தது.
அங்கிருந்து 144 பேர் பலியான கான்பூரை வந்து பார்க்க நேரமில்லை.
மோடி ஒண்ணுமே செய்யலைன்னீங்க...
இவ்ளோ செஞ்சிருக்காரே...
நன்றிகெட்ட மக்களே...

இனியும் செய்வார். இப்ப தானே 500, 1000 ஒழிஞ்சுருக்கு. போகப் போகப் பாருங்க.

(கட்செவி (வாட்சப்) ஊடகத்திலிருந்து)

# தேடிப்பணம் பெற்றுத் தினமும் வரிசையில் நின்று...



**மெய்யப்பன் சாந்தா**

மகாகவியின் பலம் பொருந்திய சொற்கள் இன்றைய வங்கிகளின் வாடிக்கையாளர்களுக்கு நிபந்தனைகளின்றிப் பொருந்துகிறது. பொதுவாகவே வங்கிகளின் ATMகளில், பணம் நிரப்புவதற்கு பல பொதுவான விதிகள் உண்டு. சேர்ந்தாற்போல் வரும் விடுமுறை தினங்கள், மற்றும் பண்டிகைக்காலப் பயன்பாடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் பணம் நிரப்பப்படும். இப்பணியினில், இரண்டுநிலைப் பணியாளர்கள் ஈடுபடுவார்கள். பணம் போதாமல் போகிற நிலையே பெரும்பாலும் வராமல்தான் பல வங்கிகள் பணிபுரிந்து வருகின்றன. அப்படிப்பட்ட நிலையில், 500, 1000 ரூபாய் நோட்டுக்கள் செல்லுபடியாகாது என்று அறிவித்த பிறகு, தக்க பணப்பரிமாற்றக் கட்டமைப்புச் செய்யத் தவறி விட்டது ரிசர்வ் வங்கி.

ஆறுமாதங்களாகத் திட்டமிட்ட நிலையில் ஒட்டுமொத்த 100ரூபாய் கையிருப்புக்குப் பற்றாக்குறை வரும் என்பதை யோசித்து, இரண்டாயிரம் ரூபாய் நோட்டின் சந்தைப்படுத்துதலில் உள்ள சிக்கல்களை ஆராய்ந்து, போர்க்கால அடிப்படையில், 100ரூபாய் நோட்டுக்களை தயாராக அச்சடித்து வைத்திருந்திருக்க வேண்டும்.

அவசரத்துக்கு, அதிகம் புழங்கப்படாத 20ரூபாய் கட்டுகளும் அச்சடிக்கப்பட்டு, வங்கிகளுக்கு அனுப்பப்பட்டிருந்தால், ஒரு 2000 ரூபாய் நோட்டினை கால் கடுக்க வரிசையில் நின்று பெற்று அதற்குச் சில்லறை மாற்ற வேண்டிய முட்டாள்தனமான, பரிதாபகரமான நிலைக்கு மக்கள் வந்திருக்க மாட்டார்கள்.

இதில், நெருடலான விஷயம் மூன்று. தனியார் வங்கிகளுக்கு அளிக்கப்பட்ட பணத்தினைவிட மிகக்குறைவான பணம்தான் ஏனைய பொதுத்துறை வங்கிகளுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஒரு பொதுத்துறைவங்கியின் கிளை தோராயமாக 85 லட்சம் பெற்றிருக்கிறது என்றால், இந்தத் தனியார் வங்கியின் கிளை கிட்டத்தட்ட 7.5 கோடி பெற்றிருக்கிறது. இவர்களின் வாடிக்கையாளர்கள் பெரும்பாலும் மேல்தட்டு மக்களேயன்றி பொதுத்துறை வங்கிகளின் வரிசையில் நின்றுகொண்டிருந்த நடுத்தட்டு மக்களோ, ஓய்வூதியர்களோ அல்லர்.

அனைத்து ஓய்வூதியமும், பொதுத்துறை வங்கிகளின் மூலம்தான் வழங்கப்படுகிறது. அரசு சார்ந்த ஊதியங்கள் பாரத ஸ்டேட் வங்கி மூலம் அளிக்கப்பட்டு வரும்நிலையில், எந்த விதப் பொதுச் சேவையும் செய்யாத, இந்த மூன்று வங்கிகளின் ஆயிரத்துக்கும் குறைவான கிளைகள் பெருமளவில் பணம்பெற்றது எந்த அடிப்படையில்?

தங்களிடம் போதிய கையிருப்பு இல்லாமல் பொதுத்துறை வங்கிகளின் அலுவலர்களும், ஊழியர்களும் மக்களின் கோபத்துக்கும், மன உளைச்சல்களுக்கும் ஆளாகியிருக்கின்றனர்.

இவர்களில் சில கறுப்பு ஆடுகள் செய்த தில்லுமுல்லு காரணமாக, கடந்த ஒன்றரை மாதங்களாக அவதியும் அல்லலும் அவமானமும் அடையும், உண்மையான ஆயிரக்கணக்கான வங்கி ஊழியர்களின் துயரம் எப்போது தீரும் என்பதே மிகப்பெரிய கேள்வி.


காரணம், எந்த வாடிக்கையாளரின் கோபத்திற்கு அவர்கள் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார்களோ அந்த வாடிக்கையாளரின் சேவைதான் தன் பணி; தான் வாங்கும் ஊதியத்தின் ஊற்றுக்கண் என்பதை அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள்.

ஆட்சிப்பொறுப்பில் உள்ளவர்கள்தான் அதனை உணரவில்லை.

எப்போது உணரப்போகிறார்கள் ?

●

# டங்கல்



'**டங்கல்**' (Dangal) இந்தித் திரைப்படம். அழகான கட்டுக்கோப்போடு, எவ்விதக் குழப்பமும் இல்லாமல், நேர்த்தியாக, தெளிவாகக் கதை சொல்லியிருக்கிறார் இயக்குனர்.

பெண்கள் அடுப்பூதுவதற்கும், வருங்கால சந்ததியை உருவாக்குவதற்கும் மட்டுமே படைக்கப்பட்டவர்கள். ஆண் குழந்தை வேண்டுமென்பதற்காக வரிசையாகக் குழந்தை பெறுவதும், மல்யுத்தம் செய்வதற்கு இடையூறாக இருப்பதினால் தலை முடியை வெட்டிக் கொண்ட பெண்கள் ஆணாதிக்கச் சமூகத்தின் கேலி, கிண்டலுக்கு உள்ளாவதும், பெண்கள் மல்யுத்தம் செய்தால் ஆண்மை மேலோங்கி, பெண்மை குறைந்து திருமணம் செய்யத் தாமதம் ஆகலாம் அல்லது எந்த ஒரு ஆணும் மணம் செய்ய முன் வராமல் போகலாமென்று பெண்களின் அம்மா பயந்து வருந்துவதும் மிக நேர்த்தியாக காண்பிக்கப்பட்டுள்ளது.

அமீர்கான்–மல்யுத்த வீரங்கனைகளின் தகப்பனார்... எப்போதாவது சிறிதாய்ப் புன்முறுவல் செய்வது, பெண்கள் எத்தனை கோப்பைகள், மெடல்கள் வாங்கி வந்தாலும், உள்ளுக்குள் உள்ள மன மகிழ்ச்சியை வெளியே கிஞ்சித்தும் காண்பிக்காத மனோபாவம், இந்தியாவிற்குத் தங்கம் வாங்கிக் கொடுப்பதற்கு, ஊர்க்காரர்கள் கேலி செய்தாலும் அவற்றை உதாசீனப்படுத்தும் நடிப்பு, பிரமாதம்.

சாக்ஷி பெண் வீரர்களின் அம்மா... இந்திய அம்மாக்களுக்கேயுரிய, பெண்களை மணம் செய்வித்து, கரை சேர்த்து, நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொடுக்க வேண்டுமே என்று சதா எண்ணிக்கொண்டிருக்கும் சராசரி அம்மா. அப்பாவுக்கும் மூத்த பெண்ணிற்கும் பிணக்கின் போது பாலமாய் நின்று தீர்த்து வைப்பதும், ஆரம்பத்தில் பெண்கள் மல்யுத்தம் செய்வது பிடிக்கா விட்டாலும் பதக்கம் வாங்கும் போது மன மகிழ்வதுமென்று முக்கிய பாத்திரத்தையேற்று கலக்குகிறார்... சரியான தேர்வு...

பாத்திமா , சானியா (கீதா போகட் – பபிதா போகட்) இருவரும் மல்யுத்த வீராங்கனைகள். துடுக்கான பெண்கள். இவர்கள் செய்யும் மல்யுத்தம் ஒரு தேர்ந்தெடுத்த, நல்ல பயிற்சி பெற்ற தொழில் முறை வீரர்களைப் போல் விளையாடுகிறார்கள்.

இயக்குநர் நிதேஷ் திவாரி... உண்மைக்கதையை திரைக்குக் கொண்டு வந்து, எல்லோரையும் நடிக்க வைத்து, ஒரு திரைக் காவியத்தைத் தந்தவர். இவரின் உழைப்பு, படம் முழுக்கத் தெரிகிறது.

இந்த படம் என்ன சொல்கிறது ?

1. பெண்களுக்குச் சம உரிமை.

2. பெண்களும் திறமை மிக்கவர்கள். ஆண்கள் செய்யும் எந்த வேலையையும் செய்து, சாதிக்க உடல் வலிமையும், மன உறுதியும், அறிவும் பெற்றவர்கள்.

3. பெண்களுக்குச் சாதிக்க வாய்ப்பினையும் பிற வசதிகளையும் குடும்பத்தினர் மற்றும் அரசு செய்து கொடுத்தால் அவர்கள் நிச்சயம் சாதிப்பார்கள். செய்து கொடுக்க வேண்டும். இது அவர்களின் கடமை.


4. பெண்களின் மீதான சமூகத்தின் பார்வை உயர்ந்ததாக மாற வேண்டும்.

பெண்ணுரிமை முக்கியத்துவம் பெற்று விளங்கும் இந்தக் கால கட்டத்தில் இந்தப் படம் ஒரு சரியான தாக்கத்தை, விழிப்புணர்வைச் சமூகத்தில் ஏற்படுத்தும்.

பெண்மை போற்றுவோம். ஒவ்வொரு பெண் குழந்தையும் ஏதாவது ஒரு துறையில் ஒளிரச் செய்வோம்.

ஒரு நல்ல படம் பார்த்த மன நிறைவு.

# பாஜக தலைவர் அமித்ஷா செய்திருக்கும் 500 கோடி கருப்புப்பண ஊழல்



**(மே 17 இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையின் ஒரு பகுதி)**

அமித்ஷா, பாஜகவின் தேசியத் தலைவர். அவர் நிர்வாக இயக்குனராக இருக்கும் அகமதாபாத் மாவட்டக் கூட்டுறவு வங்கியில் நவ 8–12ம் தேதிகளுக்குள் ரூ500 கோடி பணம் செலுத்தப்பட்டிருக்கிறது.

ஒரு கூட்டுறவு வங்கியில் வெறும் மூன்று நாட்களுக்குள் இவ்வளவு அதிகமாகப் பணம் செலுத்தப்பட்டதும், மாற்றப்பட்டதும் எப்படி..? அதுவும் 'ஊழலற்றவர்களாக' 'புனித ஆன்மாக்களாக', 'கருப்புப் பணத்தை ஒழிப்பவர்களாக'க் கூச்சலிடும் பாஜகவின் தலைவர் அமித்ஷா நிர்வாக இயக்குநராக இருக்கும் வங்கியில் இந்த நிலையெனில், பாஜகவின் கள்ளப் பண ஒழிப்பின் நோக்கமென்ன?

தமிழகம் உள்ளிட்ட பாஜக ஆட்சியில் இல்லாத மாநிலங்களில் ராணுவத்தை வைத்தும், சங் பரிவாரங்களை வைத்தும் மிரட்டுவதைக் கட்டப்பஞ்சாயத்தாகப் பார்க்காமல் எப்படி பார்ப்பது?

கூட்டுறவு வங்கிகள் பழைய பணத்தை மாற்றுவதற்கு தடைவிதிக்கப்பட்டிருக்கும் நிலையில், பாஜகவின் கட்டுப்பாட்டில் இயங்கும் கூட்டுறவு வங்கிகளில் பழைய பணம் மாற்றப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு, கேரளா, வங்காளம் போன்ற மாநிலங்களில் விவசாயிகளுக்கு கடன் தர விடாமல் கூட்டுறவு வங்கிகளை முடக்கிய பாஜக மோடி அரசு, தனது குஜராத் மாநிலத்தில் மட்டும் திறந்து விட்டிருக்கிறது. குஜராத்தில் 18 கூட்டுறவு வங்கியில் 17 வங்கிகள் பாஜகவின் கட்டுப்பாட்டில் இயங்குபவை. இதுமட்டுமல்லாமல் குஜராத் அமைச்சர் சங்கர்பாய் சவுத்ரி தலைவராக இருக்கும் கூட்டுறவு வங்கியில் 200 கோடி ரூபாய் செலுத்தப்பட்டிருக்கிறது.

கூட்டுறவு வங்கிகளில் பணம் மாற்ற ரிசர்வ் வங்கி தடைவிதித்திருந்த நிலையில் இது எப்படிச் சாத்தியம் என்கிறீர்களா?... ரிசர்வ் வங்கியின் தலைவர், குஜராத்தி மார்வாடி கும்பல் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

ஆக, இந்தப் பண முடக்கம் என்பது பாஜகவினர் மட்டும் தங்களது கருப்பு பணத்தை வெள்ளைப்பணமாக மாற்றும் யுக்தி என்பதைத் தவிர்த்து வேறில்லை. குஜராத்தி மார்வாடிகளுக்கு மட்டுமே இதில் லாபமிருக்கிறது என்பதால்தான் மதுரையில் மார்வாடிகள் பண முடக்கத்தை ஆதரித்து ஊர்வலம் போக முடிகிறது.

குஜராத் பாஜகவின் முன்னாள் எம்.எல்.ஏ யதின் ஓஜா, அகமதாபாத் கூட்டுறவு வங்கியில் பணம் செலுத்த நின்றிருந்த பாஜகவின் கும்பல்களைப் பற்றிய வீடியோ தன்னிடம் இருப்பதாகப் பகிரங்கமாக மோடிக்கு எழுதிய கடிதத்திற்கு, 56 இன்ச் மோடி இதுவரை பதிலளிக்கவில்லை.

அமித் ஷா எனும் பாஜகவின் தேசியக் கட்சித் தலைவர் செய்திருக்கும் இந்த 500 கோடி ரூபாய் கருப்புப் பணம் குறித்து 'துணை ராணுவத்தோடு' ரெய்டு நடத்துவார்களா?

அல்லது 'இந்த நேர்மை, யோக்கியம், ஊழல் ஒழிப்பு' நாடகங்கள் எல்லாம் தமிழகம் போன்ற பகுதிகளுக்கு மட்டுமா?

சென்ற டிசம்பர் 19ஆம் தேதி திங்கள் கிழமை, இவ்வங்கியின் அகமதாபாத் ஆஷ்ரம் சாலையில் இருக்கும் தலைமைக் கிளையில் அமலாக்கத் துறையினரால் 7 மணி நேரம் நடத்தபப்பட்ட சோதனை இதுவரை ஊடகங்களால் பகிரங்கப்படுத்தப்படவில்லை. தமிழகத்தில் நடந்த செய்தி மட்டுமே பிரதானப்படுத்தப்பட்டிருக்கிறது.

பாஜக செய்யும் இந்தத் திருட்டுத் தனத்தையும், அயோக்கியத் தனத்தையும் கண்டும் காணாமல், தங்களது கட்சித் தோழர்கள், கட்சிக் கிளைகள் மூலம் மக்களைத் திரட்டாமல், சிறுவணிகர்கள், தொழிலாளர்களைத் திரட்டாமல், தொழிற்சங்கங்களை, பேராசிரியர் சங்கங்களை, மத்திய ஊழியர் அமைப்புகளைத் திரட்டாமல் வீதிக்கு வரவைக்காமல் கள்ள மௌனம் காக்கும் சி.பி.எம் போன்ற கட்சிகள் இருக்கும்வரை பாஜக உயிர் வாழவே செய்யும். இவ்வளவு பெரும் தேசிய நெருக்கடியின் பொழுதும், ஏழைகள் சுரண்டப்படும் பொழுதும் கம்யூனிஸ்ட் கட்சிக் கொடியை இழுக்கு செய்யும் இந்த மார்க்ஸ்சிஸ்ட் கும்பல் இருக்கும் வரை நேர்மையான இளைஞர்கள் காய் அடிக்கப்படுவது நடைபெற்றுக் கொண்டே இருக்கும். ஒரு புறம் பாஜகவின் இந்துத்துவத்திற்கு கள்ள மௌனத்தின் மூலம் ஆதரவு, மறுபுறம் இளைஞர்களைக் காயடிப்பது என நகரும் இந்த வலையிலிருந்து மீள்வது அவசியம். மார்க்ஸிஸ்ட் கட்சியின் நேர்மையற்ற தரகுத் தலைமை உடனடியாக முடக்கப்பட்டு நேர்மையான இளைஞர்கள் அக்கட்சியைக் கைப்பற்றவேண்டும்.

இத்தனைக்குப் பிறகும் எவராவது மோடி பாஜகவிற்கு ஆதரவு தெரிவித்து வந்தால் சரியான முறையில் ஆதாரங்களோடு பதில் தாருங்கள் தோழர்களே.

தேசபக்தியாம், நாடு முன்னேற்றமாம்.

"அமித்ஷாவை கைது செய். பாஜக அமைச்சர்கள், தலைவர்கள் வீடுகளில் சோதனை நடத்து."

இதைக் கேட்பதைவிட்டு, தமிழகத்திலிருக்கும் ஊழல் பெருச்சாளிகளை நோக்கி மட்டும் உங்கள் கைநீளுமெனில் நீங்களும் பாஜகவின் கைக்கூலிகள் என்றே அர்த்தம்.

ஊழலைப்பற்றியும், கருப்புபணத்தைப் பற்றியுமான குற்றச்சாட்டை முன்வைத்து பாஜகவினை நோக்கி கை நீட்டாதவர்கள் அயோக்கியர்களே.

அமித்ஷாவின் இந்த அயோக்கியத் தனத்தை வெளிவிடாமல் ஊடகங்கள் முடக்கி இருக்கின்றன. மம்தா மட்டுமே இது குறித்துப் பேசி இருக்கிறார். தமிழக ஊடகங்கள் இதுகுறித்துப் பேசவேண்டும், அம்பலப்படுத்த வேண்டும்.

நேர்மை, யோக்கியதை எனப் பேசும் நிர்மலா சீத்தாராமனிடம் இந்தக் கேள்வியைத் தமிழக ஊடகங்கள் கேட்குமா?

தமிழகத்தின் ஆளும்கட்சி எதிர்க்கட்சி தலைவர்கள் இதுகுறித்து பேசுவார்களா..?

தமிழகத்தின் அனைத்துக் கட்சிகளும், இயக்கங்களும், ஊடகங்களும், சிந்தனையாளர்களும் இதுகுறித்துப் பகிரங்கமாக பேச வேண்டும்.

ஒரே குரலில் பேசத் தமிழகம் தயாராக வேண்டும்.

இல்லையெனில் அழிக்கப்படுவோம். ●

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

நிர்வாக ஆசிரியர்கள்
**சிற்பி செல்வராஜ்**
**கி.செந்தில்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

அச்சில் உதவி
**அ.சாதிக் பாட்சா**
**ஜெம் கிராபிக்ஸ்**

இணையதளம்
**www.keetru.com**

சுபவீ வலைப்பூ
**www.subavee.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**

# பேரவைக் கருத்தரங்கம்



தந்தை பெரியார் - அண்ணல் அம்பேத்கர் நினைவு நாள் சிறப்புக்கூட்டம் திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் சார்பில் 18.12.2016 அன்று ஈரோட்டில் நடைபெற்றது. பேரவை மாவட்டச் செயலாளர் ஆ.தமிழ்க்குமரன் தலைமையில் மாவட்டத் தலைவர் கு.சேகர் வரவேற்புரை ஆற்றினார். தி.மு.க பொறுப்பாளர் செந்தில்குமார், பேரவை அமைப்புச்செயலாளர் ப.புலேந்திரன், பி.என்.எம். நடேசன், திராவிடர் கழக சண்முகம் உள்ளிட்டோர் முன்னிலையில் பேரவைத் துணைப் பொதுச் செயலாளர் சிற்பி செல்வராஜ் கருத்துரையைத் தொடர்ந்து பொதுச் செயலாளர் சுப.வீரபாண்டியன் விழாப் பேருரையாற்றினார்.

# திருவண்ணாமலை மாவட்ட அமைப்புக்கூட்டம்



24.12.2016 அன்று திருவாண்ணாமலை மாவட்டம் செய்யாறில் மாவட்ட அமைப்புக் கூட்டம் நடைப்பெற்றது. மாவட்டத் தலைவராக சண்முகம், செயலாளராக விக்ரமாதித்தன், பொருளாளராக மங்கலம் பிரபாகரன், செய்யாறு நகரத் தலைவராக லோகநாதன், செயலாளராகத் தமீம் அன்சாரி, பொருளாளராக கிருஷ்ணன், துணைத் தலைவராக முத்துலட்சுமி, நகர இலக்கிய அணிச் செயலாளராக செல்வகுமார் ஆகியோர் பொறுப்பேற்றனர். பொதுச் செயலாளர் சுப.வீரபாண்டியன் வழிகாட்டுதலில், மாநில இலக்கிய அணிச் செயலாளர் லதாராணி ஏற்பாட்டில், மாநில அமைப்புச் செயலாளர் ப.புலேந்திரன் இந்த அமைப்புக் கூட்டத்தை நடத்தி முடித்தார்.

*தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி !*

**கருஞ்சட்டைத் தமிழர்**

# அது என்ன கஞ்சாவா? அபினா?

**கோ**யபல்ஸ் உயிரோடு இருந்திருந்தால், இன்று பொய் சொல்வது என்பதில் மோடியிடம் அவர் கையேந்திப் பிச்சை கேட்க வேண்டிய நிலை ஏற்பட்டு இருக்கும்.

தான் ஆட்சிக்கு வந்தால், வெளிநாட்டில் உள்ள கருப்புப் பணத்தை எல்லாம் கொண்டு வந்து, ஆளுக்கு 15 இலட்சம் ரூபாய் வங்கியில் போடுகிறேன் என்றார் மோடி.

இந்தப் பச்சைப் பொய்யை நம்பி வாக்களித்த மக்கள் மீது, தன் கையாலாகாத் தனத்தைக் காட்டி அவர்களை வீதியில் நிற்க வைத்து விட்டார் அதே மோடி, நவம்பர் 8ஆம் தேதி முதல்.

நாள் தோறும் பிரதமரும், ரிசர்வ் வங்கியும் மாற்றிமாற்றி அறிவிப்புகளை வெளியிட்டனர் ரூபாய் நோட்டுகள் குறித்து, எல்லாமே குழப்பங்கள்தான்.

25.12.2016 இன்று ஓர் அறிக்கை வெளிவந்துள்ளது. டிசம்பர் 31ஆம் தேதிக்கு பிறகு தடை செய்யப்பட்ட 500, 1000 ரூபாய் மதிப்பில் பத்துத் தாள்கள் வைத்திருந்தால் 4 ஆண்டுகள் சிறைத் தண்டனையாம்.

தடை செய்யப்பட்ட கஞ்சா, அபின் எப்போதும் பயன்படுத்தக்கூடியவை. அதை வைத்திருந்தால் தண்டனை என்பது அறிவுடமை.

தடை செய்யப்பட்ட ரூபாய்த் தாள்கள், தடை செய்யபட்ட நாளிலிருந்து செல்லாக்காசாகி விடுகின்றன. அவைகளை யாரும் பயன்படுத்த முடியாது. பிறகு அவற்றை வைத்திருந்தால் என்ன? இல்லாவிட்டால்தான் என்ன? இரண்டும் ஒன்றுதான்!

அவைதான் பயனற்றவை ஆயிற்றே. இதற்கா நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனை. இது அறிவுடமை அன்று.

இன்னொரு குழப்பமும் இருக்கிறது. டிசம்பர் 31ஆம் தேதியுடன் ரூபாய்த் தாளின் தடை நடைமுறைக்கு வருகிறது. மறுநாள் கையில் பணம் இருந்தால் கைதுதான்.

அப்படியானால் மார்ச் 31ஆம் தேதி வரை செல்லாத பணத்தை ரிசர்வ் வங்கியில் மாற்றலாம் என்று சொல்லும் அதே அறிக்கையின்படி, மார்ச் 31 வரை கையில் செல்லாப் பணம் வைத்திருக்கலாம் என்பதுதானே பொருள். பின் எப்படிக் கைது செய்ய முடியும்.

இது குழப்பம் அன்று. பைத்தியக்காரத்தனமான அறிக்கை, செயல்.

துக்ளக் ஆட்சி என்பார்கள். மன்னன் துக்ளக்கின் சிந்தனை சரியாக இருந்தது. செயல்படுத்திய முறைதான் குழப்பம் நிலவியது.

மோடி ஆட்சி என்றால் சிந்தனையும் இல்லை, செயல் முறையும் சரி இல்லை.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் சொல்கிறார் “மக்களுக்கோ உயிரின் வாதை.” இதுதான் மோடியின் ஆட்சி.



பொது சிவில் சட்டம், புதிய கல்விக் கொள்கை ஆகியவற்றை எதிர்த்துப் தி.இ.த.பேரவை சார்பில் நிலக்கோட்டையில் நடந்த ஆர்ப்பாட்டம்



## மறக்க முடியுமா?

# திருவாரூர் தங்கராசு

### எழில்.இளங்கோவன்

“சட்டத்தை எதிர்த்த தோழர்களை எல்லாம் தேடிப்பிடித்து, அவர்களுக்குப் பெருமை சேர்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் இரவு பகல் பாராது கடுமையாக உழைத்து இந்த மாநாட்டிற்கு ஏற்பாடு செய்துள்ளார்கள்.

1946இல் இந்தியாவில் டொமினியன் அந்தஸ்துள்ள இடைக்கால அரசு ஒன்று அமைக்கப்பட்டது. அப்போது பிரதமர் நேரு, பாகிஸ்தானைச் சேர்ந்த லியாகத் அலிகான், நிதி அமைச்சர் ராஜேந்திர பிரசாத் தலைமையில் 1947இல் கூடி அரசியல் நிர்ணய சட்டம் வகுக்கப்பட்டது.

டி.டி.கிருஷ்ணமாச்சாரி, அல்லாடி கிருஷ்ணசாமி, கோபால்சாமி ஐயங்கார், கே.எம்.முன்ஷி ஆகிய பார்ப்பனர்களும், அசாம் மாநிலத்தைச் சேர்ந்த முகமது சாதுல்லா என்ற முஸ்லிமும் அரசியல் சட்டத்தை உருவாக்கிய குழுவில் இடம் பெற்று இருந்தனர். குழுவின் தலைவர் டாக்டர் அம்பேத்கர்.

பிறகு அம்பேத்கர் அமைச்சரவையில் இருந்து வெளியே வந்து, பார்ப்பனர்கள் தன்னை ஏமாற்றிவிட்டார்கள் என்றார். ‘நானே அரசியல் சட்டத்தை எரிப்பேன்’ என்றார். அதைத்தான் நமது தோழர்களும் செய்தார்கள்”.

– தஞ்சையில் 19.5.2007ஆம் நாள் நடந்த பெரியார் திராவிடர் கழகச் சாதி ஒழிப்பு மாநாட்டில் இப்படிப் பேசியவர் திருவாரூர் தங்கராசு.

1957ஆம் ஆண்டு தந்தை பெரியாரால் மிகப் பெரிய அளவில் அரசியல் சட்ட எரிப்புப் போராட்டம் நடைபெற்றது. அதில் 3 ஆயிரம் பெரியார் தொண்டர்கள் கைதாகிச் சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

அப்போராட்டத்தில் திருவாரூர் தங்கராசு கலந்து கொள்ளவும் இல்லை, கைதாகவும் இல்லை.

ஏனெனில் இப்போராட்டம் – கைதுகளுக்குப் பின் ஆகவேண்டியவைகளைச் செய்வதற்காகவும், பரப்புரைகள் செய்வதற்காகவும் தங்கராசுவை தந்தை பெரியார் இப்போராட்டத்தில் கலந்து கொள்ள வேண்டாம் எனத் தடுத்துள்ளார்.

பின்னர் பெரியாரின் வேண்டு கோளை ஏற்று, 3 ஆயிரம் தொண்டர்கள் கைது செய்யப்பட்டதற்கு ஏதிராக மாநிலம் முழுவதும் வலிமையான கண்டனக் கூட்டங்களை நடத்தி இருக்கிறார் தங்கராசு.

சிறந்த பேச்சாளரும், எழுத்தாளருமான திருவாரூர் தங்கராசு 6.4.1927 ஆம் நாள் பிறந்தார். தன் 17ஆம் வயதில் திராவிடர் கழகத்தில் இணைந்தார்.

இவர் தொடக்க காலங்களில் தனியார் வணிக நிறுவனங்களில் எழுத்தராகவும், காசாளராகவும் பணியாற்றியிருக்கிறார். ஆனாலும் இயக்கப்பணிகளில் அவரின் நாட்டம் குறையவில்லை.

இவர் ஒரு நகைக் கடையில் பணியாற்றியபொழுது, ஒருநாள் மாலை இயக்கப்பணிக்காகச் செல்லும் அவசரத்தில் கடையைப் பூட்டாமல் சென்றுவிட்டார். நல்லவேளை கடையில் திருட்டுப் போகவில்லை.

இதை அறிந்த கடை உரிமையாளர் தங்கராசுவை வேலையிலிருந்து நீக்கிவிட்டார் “நீ இயக்க வேலையைப் பார்” என்று. இவரின் இயக்கப்பணிக்கு இது ஒரு சான்று.

தொடக்கத்தில் காங்கிரஸ் மீது பற்று கொண்டு இருந்த இவர் தந்தை பெரியாரின் கொள்கையால் ஈர்க்கப்பட்டு இளமையிலேயே திராவிடர் கழகத்தில் இணைந்தவர்.

கலைஞர், திருவாரூர் தங்கராசு, திருவாரூர் சிங்கராயார், தண்டலம் ரங்கராசு, ஆகியோர் பெரியார் தொண்டர்களாக அணி வகுத்த சமகாலத்தவர்.

திருவாரூர் தங்கராசு தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் புலமை பெற்றவர்.

சமஸ்கிருதத்தில் வால்மிகி இராமாயணம் உட்பட பிற இராமாயணங்களையும், மலையாள இராமாயணம், கம்ப இராமாயணம் ஆகிய இராமாயணங்களை நன்கு படித்து ஆய்வு செய்தார்.

அதன் விளைவாக அவர் எழுதிய இராமாயணம் குறித்த நூல் ஓர் அதிர்வை ஏற்படுத்தியது. உடனே வழக்கம் போல் காங்கிரஸ் அரசு நூலைத் தடைசெய்தது.

நடிகவேள் எம்.ஆர்.இராதா இந்த இராமாயணத்தை நாடகமாக அரங்கேற்றினார். இந்நாடகமும் காங்கிரஸ் அரசால் தடை செய்யப்பட்டது. உடனே இராமாயணம் என்ற பெயரைக் கீமாயணம் என்று மாற்றி மேடை ஏற்றினார் நடிகவேள். தமிழக வரலாற்றில் ஒரு நாடகம் தடைசெய்யப்பட்டது இதுவே முதல்முறை.

வேறொரு முறை தங்கராசுவின் இராமாயணம் நாடகம் அரசுப் பொறியாளர் ஒருவரின் தலைமையில் நடைபெற்றது. உடனே அவர்மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மதவாதப் பேர்வழிகள், துறை அடிப்படையில் ஒரு கோப்பு தயாரித்தார்கள்.

இதை அறிந்த அன்றைய முதல்வர் கலைஞர், அக்கோப்பை வரவழைத்து அதில் “உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதியாகவும், நீதிபதிகளாகவும் இருப்பவர்கள் இராமாயண உபன்னியாசத்திற்கும், பட்டிமன்றத்திற்கும் சென்று தலைமை தாங்கிக் கருத்துகள் வழங்குவது பன்னெடுங் காலமாக இருக்கிறபோது, அதேபோல் இன்னொரு இராமாயணத்திற்கு ஒரு பொறியாளர் தலைமை தாங்குவது சட்டத்தை மீறிய செயல் ஆகாது” என்று குறிப்பெழுதி அக்கோப்பை மூடச்செய்தார். பொறியாளரும் தப்பினார்.

இரண்டு திருவாரூர் காரர்களும், பெரியார் புள்ளியில் இப்படி இணையும் அறிவார்ந்த சிந்தனை அழகை, எப்படித்தான் சொல்வதோ தெரிவில்லை.

திருவாரூர் தங்கராசுவின் இன்னொரு நாடகம் ‘இரத்தக் கண்ணீர்’. 1949ஆம் ஆண்டு பொங்கல் அன்று திருச்சியில் அரங்கேற்றப்பட்ட இந்நாடகம் 1954ஆம் ஆண்டு திரைப்படமாக வெளியானது. 62 ஆண்டுகளுக்கு முன்னர் ‘மறுமணம்’ என்ற சீர்திருத்தக் கருத்தை முன்வைத்தது இந்நாடகம். இப்படம் 2003ஆம் ஆண்டு ‘இரத்தக்கண்ணீரு’ என்று கன்டன மொழியில் திரைப்படமாகி பெரும் புரட்சியை செய்துள்ளது.

தேவாரம் பாடியவர்களில் திருஞான சம்பந்தரும் ஒருவர். இவரை ஒரு தெய்வீகப் ‘புருஷராக’த்தான் சொல்வார்கள் பொதுவாக.

ஆனால் ஞானசம்பந்தர் ஒரு வன்முறையாளர். அரசியின் ஒத்துழைப்பு, அரசனின் ஆணையில் மாற்றுச் சமயத்தினரைக் கொலை செய்யக் காரணமானவர் திருஞான சம்பந்தர் என்ற வரலாற்று உண்மையை அதிரடியாய் போட்டு உடைத்தார் நம் திருவாரூர் தங்கராசு, தன் ஆய்வில்.

கம்பனா? காமுகனா?, பெரிய புராண ஆராய்ச்சி, சிவனடியார் வரலாறு, சிவவிஷ்ணு லீலை, பெரியபுராண ஆராய்ச்சி, சிக்கல் சிங்கார வேலன், சாய்பாபா லீலை, இராமாயண நாடகம், கண்ணகி புகலிடம், தந்தையின் சபதம், அண்ணாவின் அவசரம் போன்ற நூல்களை எழுதிய தங்கராசு, ‘பகுத்தறிவு’ என்ற இதழையும் நடத்தியிருக்கிறார்.

பகுத்தறிவுப் பாசறையின் திருவாரூர் தங்கராசு 2014 ஆம் ஆண்டு சனவரி 5ஆம் நாள், தன் 89ஆம் வயதில் வாழ்நாள் ஓய்வை எடுத்துக்கொண்டு மரணத்தைத் தழுவினார்.

Karunchattai Tamilar. Date of Publication 12th and 28th of Every Month.
Registered with Registrar of News paper for India No: TN TAM/2009/32719, Post Regd No: TN/CH(C)/427/2016-18,
Licenced to post WPP No: TN/PMG(CCR)WPP - 206/2016-18



சிவதி




## 3

CamScanner -Phone PDF Creator

உங்கள் உள்ளங்கையில் அருமையான ஸ்கேனர் ஒன்று வைத்துள்ளீர் தெரியுமா..?

நாம் அலுவலகத்திலிருந்து பல ஆவணங்களை மற்ற இடங்களுக்கு அலுவல் நிமித்தமாக பகிர்கிறோம்.

அப்போது நமக்குள்ள பெரிய இடர்பாடு

தமிழ் எழுத்துரு போகுமா?

கோப்பின் அளவு பெரியதாக இருக்கிறதே எப்படி அனுப்புவது?

நம் அலுவலகத்தில் நல்ல ஸ்கேனர் இல்லையே என்ன செய்ய?

ஸ்கேன் செய்யப்பட்ட ஆவணம், மங்கிய தாளில் தெளிவாக இல்லாமல் இருக்கிறதே என்ன செய்ய?

– போன்ற பிரச்சனைகள் எழலாம். இனிமேல் கவலை ஏதுமில்லை. ஆம் தரமான ஸ்கேனர் நம் கைகளிலேயே இருக்கிறது.

ஆம். Play Store சென்று CamSanner - Phone PDF Creator எனும் செயலியை நிறுவுங்கள். நீங்கள் எந்த Document ä Scan செய்ய வேண்டுமோ அதனைப் படமெடுங்கள். படத்தினை மிகத்தெளிவாக அதன் எல்லைகளை நாமே நிர்ணயித்து மிகத் தெளிவாக எடுக்கலாம்.

நமக்கு Gray Scale வேண்டுமானாலும் சரி, கருப்பு வெள்ளையில் வேண்டுமானாலும் சரி. இப்போது ஆவணம் தயாராகிவிட்டது. இப்போது இதனை PDF ஆக மின்னஞ்சல், வாட்ஸ் ஆப், டெலிகிராம் என அனைத்து செயலி வாயிலாக அனுப்பலாம். இது நேராக கேமரா மூலம் படம் பிடிக்கும் தரத்தை விடத் தெளிவாக இருக்கும். மிகச்சிறிய இடத்தை மட்டுமே கொள்ளும். PDF ஆக அனுப்புவதால் எழுத்துரு பிரச்சனை ஒருபோதும் இல்லை.

அது மட்டுமல்ல அவ்வப்போது ATM, Super Market ல் நாம் வாங்கும் பட்டியல் ஓரிரு நாட்களில் மங்கிவிடும். இதனை உடனடியாக பாதுகாக்க நாம் இந்த செயலியில் பாதுகாத்தால் எப்போதும் நம்முடனே இருக்கும். தேவையான நேரத்தில் எடுத்து பார்த்துக் கொள்ளலாம்.

ஒரு தொடர்பற்ற பகுதியில் இருக்கும் போது கூட நகல் பெருக்கியும், அச்சு இயந்திரத்தையும் தேடாமல் நம் கைகளில் உள்ள திறன் பேசி மூலம் மிக எளிதாக அனைத்துவகை ஆவணங்களையும் கையாளலாம்.

தொழில் நுட்பத்தின் மூலம் நமது பணியினை எளிதாக்குவோம்.

## 4

TamilPulavar

எந்த ஒரு புரியாத சொல்லுக்கும் பொருள் தேடித்தான் அலைகிறோம். தொழில் நுட்பம் வளர்ந்து வரும் போதே நமக்குச் சோம்பலும் சேர்ந்தே வளர்ந்து வருவதும் உண்மைதான். புதியன புகுதலும் பழையன கழிதலும் இயல்புதானே.

அவ்வாறு சொற்களுக்குப் பொருள் தேடி அலையும் போது மிக நல்ல செயலி ஒன்று கண்ணில் பட்டது. பொதுவாக இணையத்தில் நாம் தேடும் சொற்களுக்கு இணையான தமிழ்ச்சொற்கள் மற்றும் ஆங்கிலத்தில் அதன் பொருள் தேடிப்பெறலாம்.

அது போலவே ஆங்கிலத்தில் இருந்தால் தமிழில் சொற்களை அறியலாம். சில அகர முதலி (Dictionary) களில் பொதுவான சொற்கள் மட்டுமே இருக்கும். துறை சார்ந்த, தொழில் நுட்பம் சார்ந்த சொற்களுக்கு பொருள் இருப்பதில்லை. மருத்துவம், பொருளாதாரம், உயிரியில், சட்டம் தொடர்பான பொருள்கள் நாம் எளிதில் பெறலாம்.

Google Play Store செல்லுங்கள் அங்கே TamilPulavar என தட்டச்சு செய்யுங்கள். உங்களுக்கு ஒரு செயலி தரவிரக்கம் ஆகும். இனி நீங்கள் தமிழில் இருந்து ஆங்கிலத்திலோ அல்லது ஆங்கிலத்தில் இருந்து தமிழிலோ எளிதில் சொற்களைப் பெறலாம்.

David McAlpin - A Core vocabulary for Tamil

கதிரைவேற்பிள்ளை தமிழ் அகராதி

Miron Winslow - A Comprehensive Tamil and English Dictionary

இசையினி தமிழ் அகராதி

சங்கச் சொல்லடைவு அகராதி

J.P.Fabricius Tamil and English Dictionary

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி

கழகத் தமிழ் அகராதி

தமிழ் தமிழ் அகரமுதலி

பால்ஸ் அகராதி

சென்னைப் பல்கலைக்கழக ஆங்கிலம் தமிழ் அகராதி

11 வகையான அகராதியில் இருந்து பொருள், எதிர்ச்சொல், இணைச்சொல், விக்சனரி, விக்கிபீடியா, யாப்பு, சந்தம், அசை எனத் தேடித்தருகிறது. அது மட்டுமல்ல மேலொரு வியப்பு. நாம் உள்ளீடு செய்யும் சொல்லுக்கேற்ற பழமொழியினையும் நாம் தேட முடியும். இந்த செயலி இணையத்திலும் கிடைக்கிறது. கணினியில் கூடுதல் வசதிகள் அளித்துள்ளனர். மொழியை கசடறக் கற்க விரும்புவோருக்கும் ஆய்வுப்பணியில் உள்ளவர்களுக்கும் மொழி பெயர்ப்பாளர் மற்றும் கல்வி கற்போருக்கும் அருமருந்தென இச்செயலி அமையும் என்பதில் ஐயமில்லை. தோழர்களே உடனே உங்கள் திறன் பேசிகளில் நிறுவி மெய்ப்பொருகள் காண்போம்,

●

Tamil Fortnightly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP

Posted: 3 January 2017

பெறுநர்/To

திரு

அனுப்புனர்/From

கருஞ்சட்டைத் தமிழர்
122/130, என்.டி.ஆர். தெரு,
ரங்கராசபுரம், கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
பேச : 044 - 42047162

Karunchattai Tamilar
122/130, N.T.R. St.,
Rengarajapuram, Kodambakkam,
Chennai - 600 024.

Owned and published by G. Dinakaran, From 7/8, Peters Colony, Rayapettah, Chennai - 14, and Printed by R.B. Anandababu at Cosmic Printers, 12 Oil Monger Street, Triplicane, Chennai -5. Editor : Suba. Veerapandian